உ
ஸ்ரீசிவமயம்
ஸ்ரீ சித்ஸபேசாய மங்களம்
திருச்சிற்றம்பலம்



# சிதம்பரம்
# ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜராஜப் பெருமான்
# மஹா மஹா கும்பாபிஷேகம்

**நிகழும் ஸ்ரீ மன்மத வருஷம் சித்திரை மாதம் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை 01.05.2015 காலை மணி 7.00 இன்மேல் மணி 8.30 இற்குள் வரும் விருஷப லக்ன சுபமுகூர்த்தத்தில்**

**சிவகாமி அம்பாள் சமேத சிதம்பர நடராஜப் பெருமானுக்கு சித்சபா சம்ப்ரோக்ஷண சித்விலாச மஹா மஹா கும்பாபிஷேகம் திருவருட்துணை கொண்டு நடைபெற உள்ளது.**

**அதேசமயம் ராஜசபை, ஆயிரம் கால் மண்டபம், நான்கு ராஜகோபுரங்கள் என்பவற்றுக்கும் கும்பாபிஷேகம் நிகழும்.**

**முன்னதாக ஏழு நாட்களுக்குப் பூர்வாங்கக் கிரியைகளுடன் பன்னிரண்டு கால யாக பூஜைகளும் சதுர்வேதம், பன்னிரு திருமுறைகள், பதினெண் புராணங்கள் மற்றும் இதிஹாச, உபநிஷத் பாராயணங்களும் இன்னிசை முதலான சமய நிகழ்ச்சிகளும் நிகழும்.**

திருச்சிற்றம்பலம்.
சிவ சிவ சிவ சிவ சிவ
ஓம்

**இங்ஙனம்,**
**ஸ்ரீ ஆனந்த நடராஜப் பெருமான் திருவடிக்கு அன்பு அடிமை**
**சிவஸ்ரீ கணேச. பரமேஸ்வர தீக்ஷிதர்**
**ஸ்ரீநடராஜர் கோயில் ட்ரஸ்டி & பூஜை**
**நடத்துநர்: ஸ்ரீ ஸ்ரீவித்யாநிதி வேத வித்யாசாலை, ஸ்ரீ மஹோத்ஸவ சதுர்வேத பாராயணம் & ஸர்வசாகை ஸம்மேளனம்**
**தலைவர்: ஸ்ரீ அறுபத்துமூவர் சைவத்திருமுறை நித்ய பாராயண மன்றம்.**

**53/85, தெற்குரத வீதி, சிதம்பரம் - 608001,**

உ
ஸ்ரீசிவமயம்
ஸ்ரீ சித்ஸபேசாய மங்களம்
திருச்சிற்றம்பலம்



஬்ர஡்மாணம் யஸ்ய ஦ெஹம் ஶவிஜ ஷிஶி வ஦ொ
வக்த்ர ஬ரநாநஸ்ரீசஸ்ய,
தசெ ஶாஜாஞஶஜெ விருஸதி
ஹர஡யாம்ஜொஶஶஹெ ஡க்ஷிணாஜெ்ர।
உயெ்ஸ ஸம்஦ெஷநாவெ்ஸ உநிவஶ உநஸா
ஹாவிதெ யஞ்ஞ ஶாஜெ,
யஸ்க்தஸ்ா நரதஸ்தீஶ ஸ்த஦வி நடிவதிம்
கஞிதாஜ்ஞிம் ஹஜெzஹழ்॥ --- உ஥ாவதி ஶிவாசாய஦ஃ

ஹஶிஹஶ வியி உவஸாரு யொzஸரஜகு விஸ்வ கதஷீரு,
஡ஹஶ கஹஶ உஜெஸ யம் வ்ரவஶஸஞ்ஜி ஸஞஃ।
஠ிஜகஶு திருகெ யஃ வஜஸதெ வெ஡ஶீதஸா,
ஸஹவத ஊஊ ஸெவஸஃ ஸாம்஬உஶதிஸ்ஸஹெஶஃ॥
--- வதஞ்ஜலிஃ

வஞ்ஞீக வஶ஦ஜ்ஸவாஸிநீம் நரத்தஶாஜ ஸஹய஦ஃ சாஶிணீழ்।
குஜ்ரஶாஜதநயாம் ஷிநெஷிநெ சிஙயா஠ி ஶிவகா஦ஸஶநாஶீழ்॥
--- வஸாவ்ரவா஡ஃ

சி஡ம்஬ஶ஠ிதி ஬்ரயாகு ஸக்ரஜ்ஞநந வஜிஷதழ்।
உக்தி வண்ணா஦ணிவயம் ஦ொக்ஷ ஊவ ந ஸம்ஶயஃ॥
--- ஜெ஠ிநிஃ

திருச்சிற்றம்பலம்

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதி தோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம்மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே --- திருஞானசம்பந்த சுவாமி.

ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லைக்
கன்றிய காலனைக் காலாற்கடிந்தான் அடியவற்காச்
சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாய் என்னும் எம்பெருமான்தன் திருக்குறிப்பே. --- திருநாவுக்கரசு சுவாமி

மடித்தாடும் அடிமைக்கண் அன்றியே மனனே நீ வாழு நாளும்
தடுத்தாட்டித் தருமனார் தமர் செக்கில் இடும்போது தடுத்தாட்கொள்வான்
கடுத்தாடும் கரதலத்தில் தமருகமும் எரியகலும் கரிய பாம்பும்
பிடித்தாடிப் புலியூர்ச் சிற்றம்பலத்தெம் பெருமானைப் பெற்றாமன்றே --- சுந்தரமூர்த்தி சுவாமி

பூதங்கள் ஐந்தாகிப் புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்துமாய் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும் விளங்கு தில்லை கண்டேனே. --- மாணிக்கவாசக சுவாமி

களையாவுடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாறா வெள்ளானை மேற்கொள்ள
முளையா மதிசூடி மூவாயிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடரங்கே --- பூந்துருத்தி நம்பிகாடநம்பி

அண்டசராசரங்களின் இதயஸ்தானமாய **சிதம்பரம்** பூலோக கைலாயம். அருவ, உருவ, அருவுருவாய் விளக்கம்பெறும் ஒரே தலம். பாலுண் பசும் குழவிக்குத் தம் பாலமுதம் வழங்குகின்ற ஸ்ரீ சிவகாமி அம்மையார், ஆன்மாக்களுக்குத் திருநிருத்த சிவானந்த வெள்ளத்தை எளிதாக்கி வழங்கி அருளும் தலம். ஒருதரம் காணவே முக்தி தரவல்ல ஒரே தலம் **சிதம்பரம்.**

அந்தணர் ஒரு மூவாயிரவர் பிரியாத சிற்றம்பலம். இங்கு சிற்றம்பலம், பொன்னம்பலம், பேரம்பலம், நடனஅம்பலம், அரசஅம்பலம் ஆகிய இவையே சித்ஸபை, கனகஸபை, ந்ருத்தஸபை, தேவசபை, ராஜஸபை என வழங்குகின்றன. இந்த ஸபைகள் முறையே ஆனந்தமய, விக்ஞானமய, மனோமய, ப்ராணமய, அன்னமய ப்ராகாரங்களால் சூழப்பட்டு விளங்குவன. இப் ப்ராகாரங்களும் பஞ்சகோசமயமான சரீரசம்பந்தமுள்ளவையே! விராட் மஹாபுருஷனின் இதய கமலமாய் அமைந்த இவ்வாலயத்துள் சிவயோகி ஒருவன் ப்ரதிதினம் ஆழ்ந்துவிடுகின்ற உட்சுவாச, நிஸ்சுவாச ரூபமாகி, ஒவ்வொன்றும் திருவைந்தெழுத்துடன் அமைந்த 21,600 தங்க ஓடுகளால் பின்னிப் பிணைக்கப்பட்ட விமானத்துடன் மிளிரும் பொற்சித்ஸபையில், பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவம் புரியும் **நடராஜராஜர் சிவகாமி அம்மை**யோடு அருளும் தலம். இத்தலம் தோற்றமறிய இயலாத பழமைவாய்ந்தது. தில்லை மரங்கள் அடர்ந்து விளங்கியதால், **தில்லைவனம்** எனப் பெயர்பெற்றது. இதனுள் ஆலமரத்தடியில் **திருமூலட்டானம்** அமைந்து அருவுருவாகிய திருமூலநாதர் சுயம்புலிங்கமாகத் தரிசனம் தருகின்றார். இந்த மூலஸ்தான சிவலிங்க மூர்த்தமே ஆதி சிவக்கொழுந்து. இந்த சிவலிங்கமூர்த்தத்தை பதஞ்ஜலி முனிவர், வியாக்ரபாத முனிவர் பலகாலம் தவமிருந்து பூசித்துக் கயிலையிலிருந்த ஆனந்த நடராஜப் பெருமானை ஸதானந்த நடனம் புரிந்தருளப் பிரார்த்திக்க, அடியார்க்கெளியன் அம்பலவன் தானும் அம்மையோடு அனவரதம் ஆனந்தக்கூத்து இயற்றி ஆன்மாக்களை உய்விக்கின்றனன். இந்த ஸபைக்கு பதஞ்ஜலி, வியாக்ரபாத முனிவர்களின் அருட்கடாக்ஷத்தினால் ஹிரண்யவர்மனாகிய கௌடதேச சக்கரவர்த்தி, பொன் ஓடு வேய்ந்தான் எனப் புராணம் கூறும். பின்பு பராந்தக சோழவேந்தனும் பொன் வேய்ந்ததாக வரலாறு கூறும். இவ்வம்பலம் விளங்கும் இச்**சிதம்பர ஸ்தலம்** எத்தலத்திலும் உயர்ந்ததாம். தலத்தினும் தீர்த்தம் உயர்வு. இத்தீர்த்தம் சிவகங்கை எனப்படும். இது மிக்க புண்ணியம் தரவல்லது.

தீர்த்தத்தினும் அதிக முக்கியமானதும் எம்மூர்த்திகளிலும் சின்மூர்த்தியானதுமான ஸ்ரீ நடராஜராஜ மூர்த்தம் மிக உயர்வுற்றது. அருளல் தொழிற்குறிப்பை உணர்த்த அவன் எடுத்த இடத் திருப் பொற்பாத கமலம் எல்லாவற்றினும் உத்தமோத்தமம்.

"தீர்த்தமென்பது சிவகங்கையே, ஏத்தரும் தலம் எழிற்புலியூரே
மூர்த்தி அம்பலக் கூத்தனுருவே" - மீனாக்ஷி மடியமர்ந்த ஸ்ரீ குமரகுருபரர்

அம்மை அருளால் ஞான அமுதுண்ட திருஞானசம்பந்தமூர்த்தி, இங்கு நடராஜரைப் பக்தியோடு பாடிப்பரவும்போது தில்லைவாழந்தணர்கள் சிவகணங்களாகத் தோற்றமளிக்க, அவ்வற்புதத்தைத் தாமும் கண்டு, ஏனையோருக்கும் காட்டியருளினார்.

அப்பர் பெருமானும், **சிதம்பரம்** தேரோடும் திருவீதிகள் நான்கிலும் தம் திருமேனியால் தவழ்ந்தும், ஊர்ந்தும் அங்கப்பிரதக்ஷிணம் செய்து, பக்திப் பரவசத்துடன் கனகசபைக்கு முன்னர் எழுந்தருளி தேவாரப் பதிகம் பாடும்போது நடராஜப் பெருமான் "என்று வந்தாய்?" என்னும் தன் திருக்குறிப்பு செய்தருளப்பெற்ற பெருமையுடையவர் ஆனார். அப்போதே மற்றோரைப் போலல்லாது பிறவி வேண்டித் தொழுதார். "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று கூத்தப் பெருமானைக் காணப் பிறவிவேண்டி யாசித்த ஒரே தலம்.

பொன்னும், பொருளும், பிறவும் எங்கும் எப்போதும் வேண்டுகின்ற தம்பிரான் தோழர், சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இங்கு தம்மைப் போற்றிப் பாடும்பொழுது பேரானந்தமுற்று இங்கேயே பேரூர்ப் பெருமானைக் காட்டிய அத்புத **நடராஜராஜர்.**

தம் மணிவாக்கெனும் திருவாசகத்தால் போற்றி அழுது புலம்பிப் பாடிய மாணிக்கவாசகப் பெருந்தகையின், அத்திருவாசகம் முழுவதையும் நடேசப் பெருமான் தமது அருட்திருக் கரத்தால் எழுதிக் கையொப்பமிட்டுத் திருக்களிற்றுப் படியென்னும் பஞ்சாக்ஷரப்படியில் யாவரும் காண வைத்தருளி மணிவாசகருக்கு உலகறிய அத்**திருவாசகத்தின் பொருளும் யாமே** என்று உணர்த்தி தம் திருவருட் ஜோதியில் பரமானந்த சிதம்பர ரஹஸ்யப் பெருவெளியில் கலக்க அருளியவர்.

இதுபோன்று திருநாளைப்போவார் நாயனார் (நந்தனார்), கணம்புல்ல நாயனார் மற்றும் பெற்றான் சாம்பான், அப்பைய தீக்ஷிதர் ஆகிய பக்குவமுற்ற அடியார்களுக்கும், பரிபக்குவமுற்ற முள்ளிச் செடிக்கும்கூட எல்லாரும் காண வீடுபேற்றை அருளிய அடியார்க்கு எளியானாகிய எம் அம்பலவாணன் ஊனக்கண்ணால் காண இயலாத, இதயமத்தியில் விளங்கும் சிவஜ்யோதியை இங்கு கண்ணாரக் காண்பதாலே, **தரிசிக்க முக்தி** அருளுகின்றனன். இன்னும், **சிதம்பரம்** என்று ஒருதரம் சொல்லவே வீடுபேற்றை அருளும் இத்தலத் திருநாமம். இத்தலத்தில் சித்தாந்த சாத்திரங்களுள் எட்டு நூல்களை வழங்கி அருளிய நமது உமாபதி சிவம்தாமும் இவ்வத்புத **நடராஜராஜரை உரிமைத் தொழில்** பூண்டு, பின் ஞானகுரு நல்லுபதேசத்துடன் இங்கு வீடுபேறுற்றவரே!

இக்கோவில், ஈசான, தத்புருஷ, அகோர, வாமதேவ, ஸத்யோஜாத முகரூபமான ஐந்து வாயில்களும், வானளாவிய நான்கு ராஜகோபுரங்களும், ஞானசக்தி **ஸ்ரீ சிவகாமஸுந்தரி அம்பாள்** முதலான சகல ஆலயங்களையும் உள்ளடக்கி சிதம்பர நந்நகர் நடுவே சிறப்புற்றோங்கி விளங்குகிறது. **சிதம்பர** ஆலய அமைப்பு மஹாமேரு பர்வதம்போல் உயர்ந்தும், அடியார்க்கு எளியராக விளங்குகின்ற ஸ்ரீ நடராஜராஜரைத் தரிசிக்க வரும் அடியவர்க்கு, இரங்கும் தன்மையை விளக்க நகரிலிருந்து இறங்கிவந்து தரிசிக்குமாறு ஆழ்ந்து - அகன்று - உயர்ந்தும் விளங்குகின்ற ஓர் அத்புதமான பரமாலயம். இதயம்போன்ற இக்கோவிலுக்கு அவ்இதயத்துள் இரத்தக்குழாய்கள் இரு பக்கவாட்டில் பிரவேசிப்பதுபோலவே கிழக்கிலும், மேற்கிலும் இரு வாயில்களே உட்செல்ல அமைந்திருக்கின்றன.

எல்லாம்வல்ல பஞ்சகிருத்திய பரமானந்தத் திருநடனமிடும் **நடராஜப் பெருவள்ளல்** ஆனந்தமய ப்ராகாரத்திற்குள்ளே ஸபையில் பஞ்ச ப்ரம்மாஸனத்திற்குமேல், நவதத்வம் கடந்த பரவெளியில், சதானந்த தாண்டவ தரிசனம் தந்தருளுகின்றார். இந்த சபையில் ஜன்னல்களாக விளங்கும் பலகணியில் 96 தத்துவங்களைக் குறிக்கும் துவாரங்கள் உள்ளன. இவற்றை கவாக்ஷம் என்பது மரபு. பசுக்களாகிய

நாம் தத்துவம் கடந்த பரமானந்தப் பெருவெள்ளத்தை, ஆனந்த தாண்டவத்தை கவாக்ஷங்களினூடாகக் கண்டு நம் மும்மலமகற்றி முக்திப்பேறடைய முடியும்.

சித்ஸபையும், கனகஸபையும் இணைகின்ற இடத்தில் திருக்களிற்றுப்படி என்று பிரசித்திபெற்ற பஞ்சாக்ஷரப்படி உள்ளது. பஞ்சாக்ஷர சித்திபெற்ற தில்லை மூவாயிர முனிவர்களே ஈசனைப் பூசிக்க எப்போதும் இப் படிவழி ஏறிச் செல்வர். தில்லைக் கூத்தப் பெருமான் கழலடி ஏத்தி, செல்வம் உயர்ந்த வாழ்வைப் பெற, **மஹா மஹா கும்பாபிஷேகம்** என்கிற இப்புண்ணிய நிகழ்வுகள், நிகழ்ச்சி நிரலில் கண்டுளவாறு நிகழ உள்ளதால், சிவபக்திமான்கள் அனைவரும் வந்து தரிசித்துச் சிவானந்தச் செல்வத்தை முழுதும் பெற்றுச் செல்ல வேண்டுமென ஸ்ரீ சிவ நடராஜராஜ குஞ்சித பாதத் துணையுடன் வேண்டி அன்புடன் அழைக்கின்றோம்.

மிண்டுமனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு ஆட்செய்மின் குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

--- சேந்தனார் திருப்பல்லாண்டு.

என்றும் இன்பம் பெருகுமியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றதெங்கும் நிலவி உலகெலாம். --- சேக்கிழார் பெருமான்

திருச்சிற்றம்பலம்.
சிவ சிவ சிவ சிவ சிவ
ஓம்